சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள். 05.04.2023.

OS.No.407/2018

DW1:விஜயசிம்மன்

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

தாவா சொத்தில் உள்ள குடிநீர் குழாய் இணைப்பிற்கு செலுத்தப்பட்ட குடிநீர் கட்டண ரசீதுகள் எண்ணிக்கை மூன்று பி .வா.சா.ஆ.1 வரிசை. 07.02.1967 ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட அடமான ஆவணத்தின் பதிவு நகல் பி.வா.சா.ஆ.2. தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீது பி .வா.சா.ஆ.3. ராஜாத்தி அம்மாள் இறப்பு சான்றிதழ் பி.வா.சா.ஆ.4. 09.08.2002 ம் தேதியிட்ட மண்ணச்சநல்லூர் பேரூராட்சி நிர்வாக அலுவலரின் செயல்முறை உத்தரவு பி .வா.சா.ஆ.5. தாவா சொத்தில் உள்ள கட்டிடத்திற்கான வரைபடம் பி .வா.சா.ஆ.6. தாவா சொத்திற்கு எனது தந்தை ஜெயபாலன் செலுத்திய வரி ரசீதுகள் எண்ணிக்கை ஏழு பி .வா.சா.ஆ.7 வரிசை. தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு எனது தகப்பனார் செலுத்திய மின் கட்டண ரசீதுகள் எண்ணிக்கை பதினேழு பி.வா.சா.ஆ.8 வரிசை. எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் பி .வா.சா.ஆ.9. எனது தகப்பனாரின் வாரிசு சான்றிதழ் பி.வா.சா.ஆ.10. தாவா சொத்திற்கு எனது தாயார் பெயரில் செலுத்தப்பட்ட வரி ரசீதுகள் எண்ணிக்கை நான்கு பி .வா.சா.ஆ.11 வரிசை. தாவா சொத்திற்கு எனது தாயார் பெயரில் செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீது பி.வா.சா.ஆ.12. 12.11.2000 ம் தேதி ஏற்படுத்தப்பட்ட கிரய ஒப்பந்தத்தின் அசல் பி .வா.சா.ஆ.13. 02.11.2001 ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரய

ஆவணத்தின் அசல் பி .வா.சா.ஆ.14. எனது தகப்பனாரின் ஆதார் அட்டையின் அசல் பி.வா.சா.ஆ.15. எனது தாயாரின் ஆதார் அட்டையின் ஒளி நகல் தாக்கல் செய்துள்ளேன் . (அசல் கொண்டு வந்துள்ளேன். அந்த அசல் ஒளி நகலுடன் சரிபார்க்கப்பட்டது ). அந்த ஒளி நகல் பி.வா.சா.ஆ.16. எனது ஆதார் அட்டையின் ஒளி நகல் தாக்கல் செய்துள்ளேன் . (அசல் கொண்டு வந்துள்ளேன். அந்த அசல் ஒளி நகலுடன் சரிபார்க்கப்பட்டது ). அந்த ஒளி நகல் பி .வா.சா.ஆ.17. 07.06.2002 ம் தேதி ராஜாத்தி எழுதி வைத்த பதிவு செய்யப்பட்டட உயில் சாசனத்தின் அசல் என்னிடம் தான் உள்ளது. 31.12.2014 ம் தேதி எனது தகப்பனார் எழுதி வைத்த பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தின் அசல் என்னிடம் தான் உள்ளது . ( மேலும் சில ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).

/Signed/
விஜயசிம்மன்

/Signed /
K.இன்பகார்த்திக்,B.A., L.L.M.,
சார்பு நீதிபதி,இலால்குடி